**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S No. 108 of 2019

Deposition of P.W. 1

Name of the Witness: திருமதி.ராஜேஸ்வரி

Date : 19.01.2026

***16ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி***

5) என்னுடைய அப்பா, என்னுடைய அண்ணன் தம்பிகள், சகோதரிகளுக்கிடைய ஏற்பட்ட பாக பிரிவினையின் போதே எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. அந்த பாகபிரிவினைக்கு பிறகு என் சகோதரர்கள் தனி தனியாக குடும்பத்துடன் வசித்து வந்தார்கள் என்றால் திருமணத்திற்கு பிறகு அவர் அவர்கள் தனி தனியாக வாழ்ந்து வந்தார்கள். என் சகோதரர் நடராஜன் மாதம்மாள் ரைஸ்மில், பென்னாகரம் ரோடு, குமாரசாமிபேட்டையில் வசித்து வந்தார், கதவு எண் 66, 67. என்னுடைய அண்ணன் ராஜமாணிக்கம் என்பவர் யாருடன் வசித்து வந்தார் என்றால் என் தாய், தந்தை உயிருடன் இருக்கும் வரை அவர்களுடன் வசித்து வந்தார். அதற்கு பிறகு நான் தான் அவரை கவனித்து வந்தேன். இந்த விவரத்தை நான் தாவாவில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் என் கணவருடன் வாழ்ந்து வந்ததால் நான் என் அண்ணன் ராஜமாணிக்கத்தை கவனித்து வந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அண்ணன் ராஜமாணிக்கம் உடல் ஊனமுற்றவர் என்ற விவரத்தை என் வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

6) 2007ம் ஆண்டில் குடும்பத்தில் ஏற்பட்ட பாகபிரிவினை பற்றி எனக்கு அப்போதே தெரியும் என்றாலும், 2010ல் ஏற்பட்ட பாகபிரிவினை பிழை திருத்தம் பற்றி அப்போதே எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. எனக்கு 2018ல்

தான் தெரிய வந்தது. 2018ல் எனக்கு தெரிய வந்தது என்று வழக்கில் தேதி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்படி விவரங்கள் எனக்கு முன்பாக தெரியும் என்பதால் தான் வழக்கில் வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

7) என் திருமணத்திற்கு பிறகு வீட்டின் வரவு செலவுகளை முக்கிய ஆவணங்கள் பராமரிப்பது என் அப்பா, அம்மா தான் பார்த்து வந்தார்கள். என் அம்மா அரசு பணியில் எதுவும் இல்லை, வீட்டில் தான் இருந்தார். என் அம்மாவிற்கு அவரது அப்பா வீட்டில் பணம் கொடுத்தார்கள். அந்த பணம் மட்டும் தான் அவருக்கு வேறு எந்த பணமும் கிடையாது. என் தாயாருக்கு என்ன நகைகள் போடப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. என் அம்மா எனக்கு சொல்லியுள்ளார். என் அம்மாவிற்கு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது, எவ்வளவு நகைகள் போடப்பட்டது என்று வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். என் அம்மாவிற்கு தனிப்பட்ட வருமானம் இல்லை என்றாலும், அவரது அம்மா வீட்டில் எந்த பணமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் அம்மா பெயரில் என் அப்பா தான் 1991ல் சொத்தை வாங்கினார் என்றாலும், அதனால் தான் பாகபிரிவினையில் அந்த சொத்து சேர்க்கப்பட்டது என்றால் சரியல்ல.

8) என் அம்மா இறக்கும் வரை என் அம்மா யாருடைய பராமரிப்பில் இருந்து வந்தார் என்றால் என் அப்பா இருக்கும் வரை அவர் கவனித்து வந்தார். நானும் போய் பார்த்து வந்தேன். என் அண்ணன், தம்பிகளும் பார்த்து வந்தார்கள். நான் என் அம்மாவை பார்த்து வந்த தொடர்பினால் என் அம்மாவை அழைத்து சென்று ஏற்கனவே பாகபிரிவினை

செய்து கொண்ட சொத்தில் ஒரு சொத்தை என் பெயரில் தான பத்திரம் ஏற்படுத்தி கொண்டேன் என்றால் சரியல்ல. அந்த சொத்து என் அம்மாவிற்கு அவரது அம்மா வீட்டில் கொடுக்கப்பட்டது. மேற்படி தானபத்திரம் பற்றி வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த சொத்து என் அம்மாவிற்கு அவரது தாய் வீட்டில் கொடுத்ததாக வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். என் தாயாருக்கு அவரது பெற்றோர் வீட்டில் கொடுத்த கிரைய ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

9) நான் உண்மை சங்கதிகளை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. குடும்ப சொத்து சம்பந்தமாக தான் என்னுடைய சகோதரா் ஜவகருக்கு பாகபிரிவினையில் வரபெற்ற சொத்தை பொறுத்து அவருடைய மனைவி ரேணுகாதேவி பெயரில் கடந்த 2007ம் ஆண்டில் தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் ஆமாம். ஈசி போட்ட பிறகு தான் எனக்கு தெரிய வந்தது. ரேணுகாதேவி பெயரில் இருந்த சொத்தை தான் வருவாய் துறை ஆவணங்கள், சொத்தின் உரிமை மூல ஆவணங்கள், வில்லங்க சான்றிதழை பார்த்து தான் இவ்வழக்கின் 16ம் பிரதிவாதி சொத்தை வாங்கி கிரையம் பெற்று சுவாதீனம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. அந்த சொத்து 2013ம் ஆண்டிலிருந்து 16ம் பிரதிவாதி சுவாதீனத்தில் இருந்து வரும் விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. குடும்பத்தில் ஏற்பட்ட பாகபிரிவினை பத்திரம் படியும், 16ம் பிரதிவாதி பேரில் உள்ள கிரைய பத்திரம் செல்லாது என்று கேட்க எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய வழக்குரையில் குறிப்பிட்டுள்ள பாக விகித்தாரத்திற்கும், பரிகார கோரிக்கையில் கேட்டுள்ள

பரிகாரத்திற்கும் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்டுள்ளதால் எனக்கு இந்த வழக்கில் எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

*10)* என் அம்மா *1, 2* வது தான் படித்திருப்பார். என் அம்மாவிற்கு படிப்பறிவு இல்லாததை பயன்படுத்தி நான் தானசெட்டில்மெண்ட் ஏற்படுத்தி கொண்டேன் என்றாலும், அது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. நான் குறுக்குவழியில் ஆதாயம் அடையவேண்டி ஏற்கனவே பாகபிரிவினையில் பாகம் ஒதுக்கப்பட்டு பாகஸ்தர் *11*ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்து விட்ட சொத்தை பொறுத்து நான் மீண்டும் ஆவணம் ஏற்படுத்தி கொடுத்து பணம் பெற்றுள்ளேன என்றால் சரியல்ல. இந்த விவரத்தை பற்றி வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதனால் இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

*11)* எனக்கு *1980*க்கு முன்பாகவே திருமணம் ஆகிவிட்டதாலும், என் தந்தை உயிருடன் இருந்த காலத்திலே கடந்த *2007*ம் ஆண்டில் குடும்ப சொத்துக்களை பொறுத்து பாகபிரிவினை ஏற்பட்டுள்ள நிலையில் நான் பாகம் கோர சட்டபடி எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா *16*ம் பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/Tmt.U.Monica, M.L.,
Additional District Judge,
Dharmapuri.